செ.வெ.எண்: 35-2020 நாள்:27.07.2020

**விழுப்புரம் நகராட்சி மற்றும் விக்கிரவாண்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக பொதுமக்கள் சமூக இடைவெளியினை பின்பற்றி பொருட்கள் வாங்கிச்செல்வதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

விழுப்புரம் நகராட்சி மற்றும் விக்கிரவாண்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக பொதுமக்கள் சமூக இடைவெளியினை பின்பற்றி பொருட்கள் வாங்கிச்செல்வதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு இன்று (27.07.2020) ஆய்வு செய்தார்.

விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் சமூக இடைவெளியினை பின்பற்றி இயங்கி வரும் தற்காலிக காய்கறி சந்தை, பழைய பேருந்து நிலையம், எம்.ஜி.ரோடு மற்றும் காமராஜர் வீதி உள்ளிட்ட பகுதிகளில் வியாபாரிகள் முகக்கவசம் அணிந்து உரிய பாதுகாப்புடன் சுகாதாரமான முறையில் பொருட்கள் விற்பனை செய்வதையும், பொதுமக்கள் சமூக இடைவெளியினை பின்பற்றி முகக்கவசம் அணிந்து பொருட்கள் வாங்கிச் செல்வதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து விழுப்புரம் காமராஜர் வீதியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை குறித்து ஆய்வு மேற்கொண்டபோது நடமாடும் வாகனம் மூலம் சுகாதாரமற்ற முறையில் மாம்பழங்கள் விற்பனை செய்வதை கண்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அவ்வாகனத்தினை அகற்றிட நகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட மஞ்சு நகர் பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதன் தொடர்ச்சியாக விக்கிரவாண்டி பேரூராட்சிக்குட்பட்ட பழைய காவல் நிலைய தெருவில் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் சிறப்பு மருத்துவ குழுக்கள் மூலம் நோய் தொற்று கண்டறியும் பணிகள் மேற்கொள்ளப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தின்போது மூன்று நபர்களுக்கு மேல் கொரோனா நோய் பாதிப்பு ஏற்பட்டு இருப்பின் அப்பகுதியினை தனிமைப்படுத்தவும் அப்பகுதி மக்களுக்கு தேவையான அத்தியாவசிய காய்கறிகள், மளிகைப்பொருட்கள் நேரடியாக வழங்கிட வேண்டும் என சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்

மகளிர் சுயஉதவிக்குழுக்களை ஈடுபடுத்தி கிராமப்புறங்களில் உள்ள பொதுமக்களுக்கு கொரோனா நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்.

தொடர்ந்து வட்டார மருத்துவ அலுவலர்கள் மூன்று முகாம்களுக்கு மிகாமல் மருத்துவ முகாம்கள் அமைத்து பொதுமக்களுக்கு கொரோனா பரிசோதனைகள் பாதுகாப்பான முறையில் தனியறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கொரோனா தடுப்பு நடவடிக்கை பணிகளில் ஈடுபடும் அனைவரும் சுய பாதுகாப்புடன் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியினை பின்பற்றி பாதுகாப்பான முறையில் பணிகளை மேற்கொள்ள அனைத்து அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வினில் நகராட்சி ஆணையர் திரு.தட்சிணாமூர்த்தி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.செந்தில்குமார், விக்கிரவாண்டி வட்டாட்சியர் திரு.பார்த்திபன் விக்கிரவாண்டி பேரூராட்சி அலுவலர் திரு.ஷேக் லத்திக் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்**